**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 74/17**

**Deposition of Witnesses for PW2**

| | | | |
|---|---|---|---|
| Name | : | திரு.அழகு துரை | Caste: |
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **12.08.2024.**

**2,3 எதிரிகள் ஆஜர். 5வது எதிரி மீதான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது. 1,4 எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது விருதுநகர் மாவட்டம் மாரனேரி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.03.2017ம் தேதி ராமநாதபுரம் போதை பொருள் தடுப்பு பிரிவில் பணிபுரிந்தபோது 6 மணியளவில் ஆய்வாளருக்கு கிடைத்த தகவலின் பேரில் அலுவலில் இருந்த காவலர்கள் 7 மணிக்கு நிலையத்தில் இருந்து புறப்பட்டு தகவலாளி சொன்ன இடமான ராமநாதபுரம் டூ திருச்சி மெயின் ரோட்டில் 8மணிக்கு போய் சேர்ந்து வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது தகவலாளி அடையாளம் காட்டிய வாகனத்தை நிறுத்தி சோதனை செய்தபோது பிரசன்னா பாண்டி, அய்யர்சாமி,முத்துபாண்டி என்று சொன்னவர்களிடம் உங்கள் வாகனத்தில் கஞ்சா கடத்தி வருவதாக தகவல் வந்துள்ளது. அதனால் சோதனை செய்ய வேண்டும் தாங்கள் விரும்பினால் அரசு பதிவு பெற்ற அதிகாரியிடமோ அல்லது அருகிலுள்ள நீதித்துறை நடுவரிடமோ அழைத்து சோதனையிடலாமா என்று கேட்டதற்கு, தேவையில்லை தாங்களே சோதனை செய்யலாம் என்று சொன்னதன்பேரில், மேற்படி நபர்களை தனிநபர் சாட்சிகள் இருவரின் முன்னிலையில் காவல் ஆய்வாளர் சோதனை செய்ய பிரசன்னபாண்டி என்பவர் மேற்படி வாகனத்தில் இருந்து வெள்ளை நிற சாக்கு பைகள் 7, செல்போன்-1, பணம் ரூ.110, வாகனத்தின் ஆர்.சி.புக் அவருடைய ஓட்டுநர் உரிமம் நகல் ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்ததில் வெள்ளை நிற சாக்கு பையை எடை போட்டு பார்க்க, ஒவ்வொரு பையிலும் சுமார் 20 கிலோ கஞ்சா இருந்தது. இதில் மாதிரி மற்றும் பகுப்பாய்விற்காக தலா 50 கிராம் வீதம் எடுத்து காக்கி கவரில் மடித்து, அதற்கு S1 to S14 வரை குறியீடு செய்து, NIB-CID சீல் வைத்தும்,

மீதமுள்ள 19.900 கிராம் எடையுள்ள 7 பைகளை அதே சாக்கு பையில் போட்டு, அதற்கு P1 to P7 வரை குறியீடு செய்து, NIB-CID சீல் வைக்கப்பட்டது. 10 மணியளவில் மேற்படி சொத்தை சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றியும், 2வது எதிரி அய்யர்சாமி என்பவர் ஆஜர் செய்த செல்போன் 11 மணியளவில் மகஜரில் கைப்பற்றியும், 3வது எதிரி ஆஜர் செய்த அவரது ஓட்டுநர் உரிமம் நகலை மகஜரில் கைப்பற்றினார். 13.00 மணிக்கு 1 முதல் 3 எதிரிகளுக்கு கைது அறிவிப்பு செய்து கைது செய்தும், 13.30 மணிக்கு 1வது எதிரியிடமும், 14.30 மணிக்கு 2வது எதிரியிடமும், 15.30 மணிக்கு 3வது எதிரியிடமும், ஒரு ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார். விசாரணைக்கு பின் எதிரி மற்றும் கைப்பற்றிய சொத்துக்களுடன் 18.30 மணிக்கு நிலையம் வந்து நிலைய கு.எண்.19/2017, u/s.8(c) r/w 20(b)(ii)(C),27(a),29 and 25 of NDPS Act- ன் படி வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

என்னை விசாரித்த ஆய்வாளர் பெயர் திருமதி.காவேரி அம்மாள். என்னை காவேரி அம்மாள் விசாரித்தபோது நாங்கள் அன்றைய தினம் எந்த வாகனத்தில் சென்றோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எழுதப்பட்டதாக சொல்லப்படும் ஆவணங்களில் என்ன எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. சம்பவ இடத்தில் எழுதப்பட்ட ஆவணங்களை நான் எழுதவில்லை. மேற்படி ஆவணங்களை யார் எழுதினார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் எந்த ஆவணங்களிலும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடன் வந்த மற்ற காவல் துறையை சேர்ந்த காவலர்கள் கையெழுத்து செய்தார்களா என்று நினைவு இல்லை. நான் அன்றைய தினம் நான் சம்பவ இடத்தில் இருந்ததற்கான ரெக்காடு எதுவும் இல்லை என்றால் சரிதான். டைரி எதுவும் எழுதவில்லை. ஆய்வாளிடம் கொடுத்தேனா என்று ஞாபகம் இல்லை. இசிஆர் ரோடு அதிக போக்குவரத்து உள்ள இடம் என்றால் சரிதான். போக்குவரத்தில் சென்றவர்களை இந்த வழக்கில் சாட்சிகளாக இருக்க அழைத்தாரா என்று எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவ இடத்தில் நாங்கள் சுமார் 1 மணி நேரம் இருந்தோம். அதன்பின்பு எங்கள் NIB-CID அலுவலகத்திற்கு சென்றுவிட்டோம். தனி நபர் சாட்சிகளை காவல் நிலையத்திற்கு வர சொன்னாரா அல்லது அழைத்து வந்தார்களா என்றால் எனக்கு நினைவு இல்லை. நான் அன்றயை தினம் என்னுடைய செல்போனை ரைடுக்கு கொண்டு சென்றேன். மற்ற காவலர்களும் செல்போன் கொண்டு வந்தார்களா என்று ஞாபகம் இல்லை. சம்பவ இடத்தில் வைத்து ஆய்வாளர் கணினியில் வைத்து எதையும் தட்டச்சு செய்தாரா என்று ஞாபகம் இல்லை. காவல் நிலைய கணினியில் தட்டச்சு செய்த காவலர் சம்பவ இடத்திற்கு வந்திருந்தாரா என்று ஞாபகம் இல்லை. நான் சொல்வது போல் சம்பவம் இல்லை என்றும் அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றும், சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில˙ எதிரிகளை கைது செய்யவில்லை என்றும் எதிரிகளிடமிருந்து எந்த சொத்தும் கைப்பற்றவில்லை என்றும், என்னுடைய மேலதிகாரிகளின் வேண்டுகோளிற்கிணங்க உண்மைக்கு மாறாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல. நான் ஆய்வாளரிடம் கொடுத்த 161(1) வாக்குமூலத்தை படித்து பார்த்தேன் என்றால் சரிதான். அதனடிப்படையில் இன்றைய தினம் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**4வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

4வது எதிரி சம்பவ இடத்திலேயே இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கும் 4வது எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய மேலதிகாரிகளின் வேண்டுகோளிற்கிணங்க உண்மைக்கு மாறாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.